**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC. 1350 of 2025 |
| Prosecution Witness | : | PW 1 |

19.05.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : ரவி | Calling | : | இலை வியாபாரம் |
| Father Name | : பெருமாள் | | : | |
| Village | : உப்புலியபுரம் | Age | : | 45 |
| Taluk | : துறையூர் | | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது உப்புலியபுரத்தில் குடியிருந்து இலை வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 21.11.2023 ம் தேதி இரவு சுமார் 08.00 மணிளவில் நானும், எனது குடும்பத்தாரும் எனது கடையில் பேசிக்கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத ஒரு நபர் அங்கு வந்து என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் விடுத்தார். அந்த நபர் யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் மீது இருந்த முன்விரோதம் காரணமாக அவருக்கு எதிராக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகிவிட்டேன் என்று சொன்னால் சரிதான். சமாதானம் மனுவில் கையொப்ளபம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளேன். கடந்த 21.11.2023ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் நானும், எனது குடும்பத்தாரும், எனது கடையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தபோது, ஆஜர் எதிரி அங்கு வந்து என்னை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், அதற்கு எனது மனைவி மரியாதையாக பேசுங்கள் என்று கூறியதற்கு ஆஜர் எதிரி அவரையும் ஆபாசமான வார்த்தைகளால் திட்டி தன்னிடம் துப்பாக்கி இருப்பதாகவும், ஏதாவது பேசினால் குடும்பத்தையே அழித்துவிடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாகவும், என்னுடைய கடையை கடக்கும்போதெல்லாம் என்னை பார்த்து முறைத்துக்கொண்டே போவார் என்றும், போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது ஆஜர் எதிரியுடன் சமாதானமாகிவிட்டதால் நடந்த உண்மை சம்பவத்தை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை**

**மறு விசாரணை – இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

ஒப்பம்/–R.சுரேஷ் குமார்,
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ),
துறையூர்.